**001/DM/25**

T.C-019

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART - A
## WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours — Maximum Marks : 100

குறிப்பு :

1. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

2. **வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.**

3. **கையெழுத்து தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.**

### பகுதி — I

1. ஆங்கிலப் பத்தியைத் தமிழாக்கம் செய்க. (1 × 10 = 10)

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக. (2 × 15 = 30)

2. சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு.

3. உழவுத் தொழிலின் இன்றியமையாமை உழவர்களை மதித்தல்.

4. உங்கள் ஊரில் நூலகம் அமைத்து தர வேண்டி நூலக துறை ஆணையாளருக்குக் கடிதம் ஒன்று எழுதுக. (1 × 10 = 10)

[Turn over

## பகுதி — II

5. பின்வரும் பத்தியைப் படித்து வினாவிற்கேற்ற விடையளிக்கவும். (5 × 1 = 5)

முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் எனப் பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர். அத்தகையோரால் தான் உலகம் நிலைத்திருக்கிறது. விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர். நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுச்சூழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை. விதைத்துவிட்டு வந்த நெல்லை அரிந்துவந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது.

வினாக்கள் :

(அ) விருந்து குறித்து தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது?

(ஆ) விருந்தோம்பல் குறித்து சிறுபாணாற்றுப்படை கூறுவது யாது?

(இ) நம் முன்னோர்களின் மகிழ்ச்சி எதில் இருக்கிறது?

(ஈ) பெரியபுராணத்தில் குறிப்பிடப்படும் விருந்தோம்பல் குறித்த செய்தியை எழுதுக.

(உ) பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்று எது?

6. பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கு சொற்களை எழுத்து வழக்கு சொற்களாக மாற்றி எழுதுக. (5 × 1 = 5)

* தம்பீ! எங்க நிக்கிறே"?
* "நீங்க சொன்ன எடத்துல தாண்ணே"
* "எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது"
* அங்ஙனக்குள்ளேயே டீ சாப்டுட்டு பேப்பரப் படிச்சிக்கிட்டு இரு...... நா வெரசா வந்துருவேன்"
* அண்ணே! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்னே!

  அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு!"
* அவம் பாட்டியோட வெளியூர் போயிருக்கான்,

  உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்!
* "சரிங்கண்ணே!"

## பகுதி — III

மொழிப்பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடையளி : (40 × 1 = 40)

7. நாம் சிந்திக்கவும், சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது __________.

8. சொற்றொடரில் அமைத்து எழுதுக - சுறுசுறுப்பு.

9. கலைந்துள்ள எழுத்துகளை முறைபடுத்தி எழுதவும்
மத்ருதும்வ

10. வெண்குடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.

11. முறை மாறியுள்ள சொற்களைச் சரியாக எழுதுக
ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை

12. பொருள் கூறுக.
கருணை

13. சுகாதாரம் பற்றிய பழமொழி ஒன்று எழுதுக.

14. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்
(அ) வைப்பு
(ஆ) கடல்
(இ) பரவை
(ஈ) ஆழி.

15. Talent – கலைச் சொல்லைத் தமிழாக்கம் செய்க.

16. பிழை திருத்தி எழுதுக.

கோழி கூவும்

17. முதல் எழுத்தை மாற்றி புதிய சொல் ஒன்று எழுதுக

மழை

18. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

சிலை - சீலை

19. பழமொழியை நிறைவு செய்க.

உப்பில்லாப் பண்டம் ____________

20. விடைக்கேற்ற வினா அமைக்க

உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பது.

21. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் ஒன்று உருவாக்குக.

"கண்ணினைக் காக்கும் இமைபோல"

22. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

முறையான உடற்பயிற்சியும், சரிவிகித உணவும் ____________ ஓட்டிவிடும்

(அ) ஆற்றலை

(ஆ) நலத்தை

(இ) காலனை

(ஈ) பாலனை

23. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க

முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும் நீக்காவிட்டாலும் வாசனை தரும் - அது என்ன?

24. நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்பிடுக

கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்து, வானம்
இருண்டது வாடைக் காற்று வீசியது!

25. Tempest – கலைச் சொல்லைத் தமிழாக்கம் செய்க.

26. உலகக் காற்று நாள் ____________

பழமொழிகளைப் பொருத்துக

27. ஆறில்லா ஊருக்கு – சோற்றுக்கு ஒரு சோறு பதம்

28. உப்பில்லா பண்டம் – விருந்தோடு உண்

29. நொறுங்கத் தின்றால் – குப்பையிலே

30. ஒரு பானை – அழகு பாழ்

31. மருந்தே ஆயினும் – நூறு வயது

32. ஐந்திணைகளை எழுதுக.

33. தொடரில் விடுப்பட்ட சொல்லை நிரப்புக
அனைவரின் பாராட்டுகளால் வெட்கத்தில் பாடகரின் முகம் ____________

34. கும்பகோணம் - ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

35. புறத்திணைகள் எத்தனை வகைப்படும்?

36. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் ____________

ஆசிரியர் பெயர்களுடன் பொருத்துக

37. சிலப்பதிகாரம் – திருத்தக்கதேவர்

38. மணிமேகலை – நாதகுத்தனார்

39. சீவக சிந்தாமணி – இளங்கோவடிகள்

40. குண்டலகேசி – சீத்தலைச் சாத்தனார்

41. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது

(அ) திருக்குறள்

(ஆ) புறநானூறு

(இ) கம்பராமாயணம்

(ஈ) சிலப்பதிகாரம்.

42. விடுப்பட்ட எழுத்தை நிரப்புக

அறிவின் மறுபெயர் ம ___________

43. நிகழ்கலைகளின் பெயர்கள் இரண்டினை எழுதுக.

44. குறிஞ்சி நில தெய்வம்

(அ) திருமால்

(ஆ) இந்திரன்

(இ) முருகன்

(ஈ) கொற்றவை.

45. விடைக்கேற்ற வினா அமைக்க

சாலைகளில் இடது பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி ஆகும்.

46. எண்ணுப் பெயர் கண்டு எழுதுக

எறும்புந்தன் கையால் எண்சாண்.

---